## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## INTERNATIONAL SEMINAR

## இன்றைய உயர்கல்வியில் தமிழ் கற்பிக்கும் முறைகளும் நுட்பங்களும்

**06, 07 பிப்ரவரி, 2020**

பெயர் : ______________________________

கல்வித்தகுதி : ______________________________

பணிபுரியும் /பயிலும் நிறுவன முகவரி :

______________________________

______________________________

______________________________

தொடர்பு முகவரி ______________________________

______________________________

______________________________

அலைபேசி எண் ______________________________

கட்டுரைத் தலைப்பு ______________________________

______________________________

______________________________

பணம் செலுத்தும் முறை : தொகை / வரைவோலை

தொகை ______________ நாள் ______________

வரைவோலை எண் ______________________________

வங்கி ______________ நாள் ______________

______________________________

நான் ______________________________

______________________________ என்ற தலைப்பில் கட்டுரை வழங்க இசைகிறேன். இக்கட்டுரை என் சொந்த முயற்சியில் உருவானது என உறுதியளிக்கிறேன்.

இடம் :

கையொப்பம்

நாள்:

(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

## கருத்தரங்கக் குழுக்கள்

### புரவலர்கள்

**அருள்முனைவர் ஞா. லெயோனார்டு சே.ச**
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

**அருள்முனைவர் செ. பீட்டர் சே.ச.**
செயலர், தூய வளனார் கல்லூரி

**அருள்முனைவர் ம. ஆரோக்கியசாமி சேவியர் சே.ச**
முதல்வர், தூய வளனார் கல்லூரி

| | |
|---|---|
| அமைப்பாளர் | : பேரா.இ. சூசை, தமிழாய்வுத் துறைத்தலைவர் |
| ஒருங்கிணைப்பாளர் | : முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ் |
| கருத்தரங்கச்செயலர் | : முனைவர் பி.செல்வக்குமாரன் |
| பொருளர் | : முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ் |
| இணைப்பொருளர் | : முனைவர் இரா. முரளிகிருட்டிணன் |
| பதிப்புக்குழு | : முனைவர் ஞா.பெஸ்கி<br>முனைவர் செ. கென்னடி<br>முனைவர் ஆ. இராஜாத்தி<br>முனைவர் லா.சார்லஸ் |
| அமர்வு ஏற்பாடு | : முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ்<br>முனைவர் டே.வில்சன்<br>முனைவர் சு.சீனிவாசன் |
| பதிவுக்குழு | : முனைவர் சி.ஷகிலாபானு<br>பேரா.சி. பாக்கியசெல்வரதி<br>பேரா.ஆ. அடைக்கலராஜ் |
| உணவுக்குழு | : முனைவர் பொன். புஷ்பராஜ்<br>முனைவர் ரெ.நல்லமுத்து<br>பேரா.த. அருள்பிரகாசம்<br>முனைவர் பா. பிரகாஷ் |
| விருந்தோம்பல் | : பேரா.சி. பாக்கியசெல்வரதி<br>பேரா.தே. இன்பென்ட் ஜீசஸ் ஜெபர்சன்<br>முனைவர் சு.அ. அன்னையப்பன்<br>பேரா. கா. ஜான்கென்னடி |
| மேடைப்பொறுப்பு | : முனைவர் ஆ. மரிய தனபால்<br>பேரா.டே.எட்வின் சார்லஸ் |
| வரவேற்புக்குழு | : முனைவர் ம.தனலெட்சுமி<br>முனைவர் ஜா. ஸ்டெல்லாமேரி |
| விளம்பரம் மக்கள் தொடர்பு: | முனைவர் ஜோ. செல்வக்குமார்<br>முனைவர் லா.சார்லஸ் |

### தொடர்பு முகவரி

**முனைவர் பி. செல்வக்குமாரன்**
கருத்தரங்கச் செயலர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2
தொலைபேசி : 0431-4226401; **அலைபேசி: 94439-05326**

# பன்னாட்டுக் கருத்தரங்கம்

# INTERNATIONAL SEMINAR

## உயர்கல்வியில் தமிழ் கற்பிக்கும் முறைகளும் நுட்பங்களும்

## (THE METHODS AND TECHNIQUES OF TEACHING TAMIL IN HIGHER EDUCATION)

**06,07 பிப்ரவரி, 2020**

## அறிவிப்பும் அழைப்பும்

## தமிழாய்வுத்துறை

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**
(‘A++’ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும் சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)
**திருச்சிராப்பள்ளி-620 002**

**St. Joseph’s College (Autonomous)**
Special Heritage Status Awarded by UGC
Accredited at ‘A++’ Grade (4th Cycle) by NAAC
College with Potential for Excellence by UGC
DBT-STAR & DST – FIST Sponsored College
**TIRUCHIRAPPALLI - 620 002.**

பெருந்தகையீர் வணக்கம்,

தென்னிந்தியாவில் தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகரில் 'கல்வி வழி மனிதம் மலர' என்ற இலக்குடன் 175 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றி வருகின்றது எம் கல்லூரி. 'உண்மைக்கும் நன்மைக்கும்' என்னும் விருது வாக்கோடு, தமிழக சேசு சபையினரால் நடத்தப் பெறுகின்ற இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல் வளத் தனித்தகுதியும், தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் (நான்காம் சுற்று) A++ தரத் தகுதியும், சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றுள்ளது. இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும், கருத்தரங்குகளை நடத்துவதிலும், முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும், சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை, ஆண்டுதோறும் காலத்திற்கேற்ற பயனுள்ள தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. இத்தகைய ஆய்வுப்போக்கினை மேலும், வளப்படுத்தும் நோக்கில், இக்கல்வியாண்டில் **உயர்கல்வியில் தமிழ் கற்பிக்கும் முறைகளும் நுட்பங்களும்** என்னும் பொருண்மையில் எம் கல்லூரியின் தமிழாய்வுத்துறை வருகின்ற 06, 07 பிப்ரவரி, 2020 ஆகிய நாள்களில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## கருத்தரங்க நோக்கம்

கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. உலகில் எவருக்கும் அவரவர் தாய்மொழியைக் கற்றுக் கொள்வது எளியதுதான் எனினும் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள பல சொற்களைக் கூட்டி எழுதுவதும் படிப்பதும் மட்டுமன்று. அந்த மொழிக்குரிய இலக்கண மரபுப்படி, பிழையறக் கற்றுக்கொள்வதுதான் சிறப்புக்குரியது. மேலும், ஒருமொழியில் நன்கு பிழையறக் கற்றுத் தெரிந்தவர்கள் அம்மொழியின் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது அதைவிடச் சிறப்பாகும். இதனால் கல்விச்சாலையில் ஒவ்வொரு படிநிலைக்கேற்ப மொழிப்பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பிற மொழிகளில் காணும்போது, காலத்திற்கேற்ற மாற்றங்களை எளிதே ஏற்றுக் கொள்ளும் நிலை உள்ளது. ஆனால், நம் தமிழ் மொழியோ பழைமையை விட்டுவிடாமலும், புதுமையை ஏற்றுக் கொள்ளும் வண்ணமாகவும் வளர்ந்து வருகிறது.

உயர்கல்வியில் எத்தனை வகையான கல்வித்திட்டம் இருப்பினும், கலை அறிவியல் கல்லூரிக் கல்வியில் மட்டுமே தமிழ்மொழிப்பாடம் கற்பிக்கப் பெறுவது வேதனைக்குரியது. மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்வியியல் போன்ற உயர்கல்வியில் தாய்மொழிப்பாடம் கற்பதற்குரிய வாய்ப்பு இல்லை. இத்தகைய சிக்கலைக் களையும் நோக்கில் கற்பித்தலில் பல புதிய முறையிலான நுட்பங்களைக் கையாளுவதால் அறிவார்ந்த சமூகம் உருவாக்கப்பெற்று அவர்கள் முன்னோடியாகத் திகழ்வர் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

கல்வியின் அடிப்படைக் கூறுகளே கற்றலும் கற்பித்தலும்தான். கற்பித்தலில் காலந்தோறும் அணுகுமுறைகளும், உத்திகளும் மாறிக்கொண்டே வருகின்றன. ஒரு மொழியை ஆழமாகக் கற்கும்போதுதான் அம்மொழி பேசும் மக்களின் வரலாற்றையும், கடந்து வந்த பாதைகளையும், வளர்ச்சி நிலைகளையும் அறிந்து கொள்ள முடியும். இம்மொழியின் வாயிலாகத்தான் பல்துறை அறிவைப் பெருக்க இயலும் என்பதால் உயர்கல்வித்துறையில் தமிழைக் கற்பிக்கும் முறைகள் பற்றியும் தொழில் நுட்பங்களைப் பற்றியும் வெளிக்கொணரும் வகையில் இக்கருத்தரங்கு நிகழ்த்தப் பெறுகின்றது.

## ஆய்வுக்களங்கள்

**தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள், செவ்வியல் இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கியக் கொள்கைகள், மொழிபெயர்ப்புகள், இலக்கியத் திறனாய்வு, கலைக்களஞ்சியம், அகராதிகள், மீட்டுருவாக்கப் படைப்புகள், படைப்பிலக்கியம், சிற்றிலக்கியம், மொழியியல், அகராதியியல், ஆராய்ச்சி நெறிமுறைகள், மனித உரிமைக் கல்வி, கணினிக் கல்வி, உளவியல், படிப்பிடைப் பயிற்சி (Internship), விரிவாக்கத் துறை (Out reach Programme), கள ஆய்வு** மேலும் இவை போன்ற களங்களில் கற்பிக்கும் முறைகளும், நுட்பங்களும் ஆய்வுக் கட்டுரையில் அமையலாம்.

தலைப்பின் பொருண்மையில் மட்டுமே கட்டுரைகள் அமைதல் வேண்டும். ஆய்வுக் கட்டுரையில் பிறர் கருத்தைக் கவர்கின்றமுறை (Plagiarism) அமைதல் கூடாது. தர நிர்ணயக்குழு தெரிவு செய்யும் தரமான கட்டுரைகள் மட்டுமே ஆய்வுக்கோவையில் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கட்டுரைகள் A4 தாளில் எட்டு பக்க அளவில் பாமினி (Bamini Font) அல்லது Unicode எழுத்துருவில் (Font Size 12; Line Space 1.5) கணினித் தட்டச்சு செய்து **tamilseminarsjc@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பும்போது, ஆய்வு நெறியாளரிடம் கையொப்பம் பெற்றுச் செம்மையாக்கம் செய்து அனுப்ப வேண்டும். கட்டுரைகள் மின்னஞ்சலில் அனுப்பியதைக் கட்டுரையாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையும் கலைச்சொற்கள் (Keywords), ஆய்வுச் சுருக்கம் (Abstract), முன்னுரை (Introduction), ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் சான்றெண் விளக்கம் (Footnotes), துணை நூற்பட்டியல் (Bibliography) ஆகியவை இடம்பெறல் வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் அச்சு வடிவில் நூலாக ISBN எண்ணுடன் வெளியிடப் பெறும்.

## பதிவுக்கட்டண விபரம்

| | |
|---|---|
| பேராளர் | : ₹ **800** |
| ஆய்வு மாணவர் | : **400** |
| பங்கேற்பாளர் | : **300** |
| அயல்நாட்டுக்கட்டுரையாளர் | : $ **15** |

## கட்டுரைக்கான கட்டணம்

**THE PRINCIPAL, St. Joseph's College,** *Payable at Tiruchirappalli-620 002* என்னும் பெயரில் வரைவோலையாக **(D.D.)** செலுத்தப் பெறுதல் வேண்டும்.

கட்டுரை அடங்கிய குறுவட்டு **(CD)** வரைவோலை, பதிவுப்படிவம் ஆகிய மூன்றும் வந்து சேர வேண்டிய **இறுதிநாள் : 20.01.2020**